**சுருக்கம்**

தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்துத் தமிழ் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழுவரிவிலக்கு – 2009–10 ஆம் ஆண்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு கட்டுதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.31 நாள்: 31.03.2010

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.191,ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 22.11.07
2. அரசாணை (நிலை) எண்.31, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 31.03.09.
3. அரசாணை (நிலை) எண்.86, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 05.08.2009.

* * * * *

ஆணை:

தமிழில் பெயரிடப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கும் அரசின் முடிவின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்புகளை ஈடுகட்டும் வகையில் வணிக வரி மற்றும் பதிவுத்துறையின் மானியக்கோரிக்கை எண்.10–ல், ரூ.30.00 கோடி (ரூபாய் முப்பது கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இந்த நிதி ஒதுக்கம், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடையே 90:10 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் மேலே இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட அரசாணைகள் முறையே 2007-08 மற்றும் 2008-09 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு ரூ. 3.00 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கேளிக்கை வரி இழப்பீடாக வழங்கி ஆணையிட்டது.

2) 2009-10 ஆம் ஆண்டில் வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் மானியக் கோரிக்கை எண் 10-ல் ரூ.30.00 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கு கேளிக்கை வரி இழப்பீடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழில் பெயரிடப்படும் தமிழ் திரைப்படங்களுக்கு முழுவரி விலக்களிப்பதனால், 2009–2010 ஆம் ஆண்டில் ஊரக

..2..

ஊராட்சிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய ரூ.3,00,00,000/– (ரூபாய் மூன்று கோடி மட்டும்) தமிழ்த் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறைகளின் அடிப்படையில் இத்தொகையை அரசின் விருப்பத்திற்கேற்றவாறு ஊரக உள்ளாட்சிப் பகுதிகளின் மிக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பான புதுமையான திட்டங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது.

3) மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

"3604-00 உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும், இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் 103, கேளிக்கை வரி–I திட்டத்தில் சேராதது–AC கேளிக்கை வரியை தள்ளுபடி செய்வதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இழப்பீடு–51, இழப்பீடு–02, ஏனைய இழப்பீடு (DPC 3604–00–103–AC-5123".

4) மேற்கண்டவாறு பற்றெழுதப்படும் தொகை, கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்:-

"8229-00 Development and Welfare funds – 200 other Development and Welfare Funds – AY Fund for Priority Schemes in Rural Areas" (DPC 8229 00 200 AY 000 D) (Receipts).

5) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையருக்கு மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தினை மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

6) இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.76139/ஊரக வளர்ச்சி/ 2009, நாள் 03.03.2010 மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அ.சா.எண்.3872/C1/2010, நாள் 31.03.2010–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை – 15.
மாநில கணக்காயர் (A & E), சென்னை –9/18

மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை –35.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை –35.(பெயரில்)
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–108,
சம்பளக் கணக்கு அலுவலர், தெற்கு, சென்னை–35.

நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை (ஊ.வ.) சென்னை–9.
நிதித்துறை (வணிகவரி), சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.